29.01.2026

O.S.No. **183/2022**

PW2- அரவிந்த்– த/பெ. கப்பல்ராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 29.01.2026.

குறுக்கு விசாரணை : (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் வணிகவியல் இளநிலை படிப்பு படித்துள்ளேன்.

2. வழக்கு சொத்திற்கு மேற்கு புறமாக தென்வடலாக ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

3. என் தகப்பனார் என் அண்ணனாகிய வாதிக்கு சர்வே எண்.156/2F ல் மொத்தமுள்ள 5 சென்டிலும் அதன் தென்பக்கம் உள்ள சர்வே எண்.157/1B–ல் மொத்தம் உள்ள 5 சென்டிலும் ஆக மொத்தம் சென்ட் 10 ல் வடபக்கம் 9.1/2 சென்டில் மேல்பக்கம் 6.1/4 சென்டை என் அண்ணனுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4. என் பெரியப்பா பெயர் என்ன என்றால் ராமரத்தினசாமி ஆகும்.

5. என் தகப்பனார் என் அண்ணனுக்கு எழுதிக்கொடுத்த 6.1/4 சென்ட்டிற்கு கீழ்பக்கமாக என் பெரியப்பாவிற்கு பாத்தியமான 3.1/4 சென்ட் இடம் உள்ளது என்றால் சரிதான்.

6. என் பெரியப்பா இடத்திற்கு செல்வதற்காக 6.1/4 சென்ட் இடத்திற்கு வடக்கு பக்கம் 5 லிங்ஸ் அகலம் உள்ள கிழமேல் பாதை

உள்ளது என்றால் சரிதான். எனவே பாதைக்காக எங்கள் இடத்தில் ½ சென்ட் இடம் கழியும் என்றால் சரிதான்.

7. என் இடத்தில் இருந்து சாலைக்காக எடுக்கப்பட்ட இடத்தின் சர்வே எண்.156/2 ஏ என்றால் சரிதான். மேற்படி சாலைக்கு எடுக்கப்பட்ட இடத்தின் மொத்த விஸ்தீரணம் 1/2 சென்டிற்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.157/1 ஏ–ல் ஒரு ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

9. என் பாட்டனார் உடன் பிறந்த 4 பேரும் தலா 18 சென்ட் வீதம் தனித்தனியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல கூடுதலாக இடம் ஒதுக்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் வாதி அவரது குறுக்கு விசாரணையில் 18 சென்ட் என ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

10. என் தாத்தாவுடன் பிறந்தவர்களில் ஒருவர் பெயர் பழனிச்சாமி நாடார் என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி நாடார் 18 சென்டில் அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்கில் 9.1/4 சென்டை 1ம் பிரதிவாதி அய்யாத்துரை என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் பழனிச்சாமிக்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டது என்று தெரியவில்லை.

11. பழனிச்சாமி நாடார் கிரையம் கொடுத்த சொத்திற்கு அடுத்த வடபக்கம் என் தாத்தா செல்வரத்தினசாமி நாடார் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் மொத்த விஸ்தீரணம் 8.3/4 சென்ட் என்றால் சரியல்ல 10 சென்ட் இடம் உள்ளது. மேற்படி 8.3/4 சென்டில் பாதைக்கு ½ சென்டும், சாலைக்கு ½ சென்டும் போக பெரியப்பாவிற்கு ஒதுக்கிய பாக இடம் 3.1/4 சென்ட் போக ஆக மொத்தம் 4.1/4 சென்ட், அனைத்தையும் சேர்த்து பார்த்தால் என் தந்தைக்கு 4.1/2 சென்ட் இடம் மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல.

12. என் தந்தைக்கு 4.1/2 சென்ட் மட்டுமே பாத்தியம் உள்ள நிலையில் என் தந்தை வாதிக்கு 6.1/4 சென்டை பொறுத்து ஏற்படுத்திய ஏற்பாட்டு ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. கூடுதலாக என் அப்பா எழுதிய 1.3/4 சென்ட் தான் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ள தபசில் சொத்தாக நான் தவறாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

13. அய்யாத்துரை வீடு கட்டும் போது என் அண்ணனுக்கு 7 வயது என அவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் வீடு கட்டவில்லை கடை தான் கட்டினார்.

14. அய்யாத்துரையின் வீட்டு அமைப்பில் மேற்கு பக்கம் கடை கட்டிடமும், கிழக்கு பக்கமும் வீட்டு பகுதியும் உள்ளது என்றால் சரிதான்.

15. கடை கட்டிடத்திற்கு அடுத்த மேற்கு பக்கம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

16. என் அண்ணன் இவ்வழக்கில் கடை கட்டிடத்தின் வடக்கு பகுதியை இடிக்க வேண்டுமென வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை ஆனால் எங்கள் இடம் குறைவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

17. வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் வாதி எனது அண்ணன் என்பதால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

18. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.156/2F மற்றும் 157/1B ஆகிய இடத்திற்கான இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி வழி பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டா நகல் பி.வா.சா.ஆ.3 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

19. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.156/2A மற்றும் 157/1A ஆகிய இடத்திற்கான இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி வழி பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டா நகல் பி.வா.சா.ஆ.4 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

20. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.156 மற்றும் 157 ஆகிய இடத்திற்கான இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட புலவரைபடம் என்றால் சரிதான். மேற்படி புலவரைபடம் பி.வா.சா.ஆ.5 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

21. நான் ஆவணத்திற்கு முரணாகவும், வாதி எனது அண்ணன் என்பதாலும் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி